# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் – 01.07.2026

**(காணொளி காட்சி விசாரணை)**

## முன்னிலை

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். CP 769/A/2024

திரு. மோகன்குமார் -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
தொழில்நுட்ப மேலாளர்,
மாவட்ட நில அளவை அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
திருப்பூர் .

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் | திரு. மோகன்குமார் அவர்கள் ஆஜராகவில்லை |
| தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். அவரது வருகையின்மை பதிவு செய்யப்பட்டது. | |
| பொது அதிகார அமைப்பு | திருமதி.கா.சீதாலட்சுமி,<br>பொதுத் தகவல் அலுவலர்/ தொழில்நுட்ப மேலாளர்,<br>மாவட்ட நில அளவை அலுவலகம், திருப்பூர்<br>அவர்கள் நேரில் ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 08.01.2024 |
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், தான் கோரிய புலஎண் தொடர்பான, நில அளவை பதிவு மேம்பாட்டுத் திட்டப்பணிக்கு முன்புள்ள பழைய நில அளவை புலப்பட பதிவேட்டு நகல் உட்பட 14 இனங்களில் தனக்கு தகவல்கள் வழங்கக்கோரி விண்ணப்பித்துள்ளார். | |
| சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் மனு மாற்றம் செய்த நாள் | ---- |

| | |
|---|---|
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் நாள் | ---- |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | ---- |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள் | ---- |
| பிரிவு 18(1)-ன்கீழ் புகார் மனு நாள் | 06.02.2024 |

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் திருமதி.கா.சீதாலட்சுமி, பொதுத் தகவல் அலுவலர் / தொழில்நுட்ப மேலாளர், மாவட்ட நில அளவை அலுவலகம், திருப்பூர் அவர்கள், மனுதாரர் கோரிய தகவல்களில் இனம் 2,4,6,7,10,11 ஆகியவற்றிற்கு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது, திருப்பூர் அலுவலகத்தை சார்ந்த காரணத்தாலும், இனம் 8-க்குரிய தகவல் தலைமையிடத்து துணை வட்டாட்சியர், பல்லடம் அலுவலகத்தை சார்ந்த காரணத்தாலும் ஓ.மு.196/த.அ.உ.ச.ம.எண்.35/2024/ஈ, 12.01.2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல் அறியும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, பொதுத்தகவல் அலுவலரின் அலுவலம் அளிக்க வேண்டிய தகவல்களான இனம் 1,3,5,9 ஆகியவற்றிற்கு பொதுத்தகவல் அலுவலரின் அலுவலகத்திலிருந்து, ஓ.மு.196/த.அ.உ.ச.ம.எண்.35/2024/ஈ, 12.01.2024-ன் வாயிலாக மனுதாரருக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவித்து அதன் நகலை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

3. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் இன்றைய தின விசாரணைக்கு ஆஜராகி, தனது கருத்தை எடுத்துரைக்கத் தவறிய நிலையில், மனுதாரரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்து, இன்றைய விசாரணையின் முடிவில் இவ்வாணையம் பின்வருமாறு உத்தரவிடுகிறது :-

- ***மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ன் கீழான மனுவினை உரிய காலத்திற்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்யாத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திருமதி.விக்டோரியா, தொழில்நுட்ப மேலாளர், மாவட்ட நில அளவை அலுவலகம், திருப்பூர் அவர்களின் மீது தகவல் அறியும் உரிமை சட்டம், 2005, பிரிவு 20(1), 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான காரண விளக்கங்களை 29.07.2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது. அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்களுக்கு இக்கடிதத்தினை சார்வு செய்ய தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்களுக்கு இவ்வாணையத்தால் உத்தரவிடப்படுகிறது.***
- ***மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ன் கீழான மனுவினை, தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(3)-ன் கீழ் பெற்றுக்கொண்டு, உரிய காலத்திற்குள் தகவல் அளிக்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் மற்றும் அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், பல்லடம் வட்டம் ஆகியோரின் மீது தகவல் அறியும் உரிமை சட்டம்,***

*2005, பிரிவு 20(1), 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான காரண விளக்கங்களை 29.07.2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது. அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்களுக்கு இக்கடிதத்தினை சார்வு செய்ய தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்களுக்கு இவ்வாணையத்தால் உத்தரவிடப்படுகிறது.*

- *மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள தகவல்களில் இனம் 2,4,6,7,10,11 ஆகியவற்றிற்கான தகவல்களை "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சலக இணையதள ஒப்புகை சீட்டின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 29.07.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பூர் அவர்களுக்கு ஆணையம் உத்தரவிடுகின்றது.*
- *மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள தகவல்களில் இனம் 8-ற்கான தகவலை "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சலக இணையதள ஒப்புகை சீட்டின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 29.07.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், பல்லடம் வட்டம் அவர்களுக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.*
- *மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள தகவல்களில் இனம் 1,3,5,6,9 ஆகியவற்றிற்கான தகவல்கள் பொதுத் தகவல் அலுவலர் / தொழில்நுட்ப மேலாளர், மாவட்ட நில அளவை அலுவலகம், திருப்பூர் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள காரணத்தால் பொதுத் தகவல் அலுவலர் /*

***தொழில்நுட்ப மேலாளர், மாவட்ட நில அளவை அலுவலகம், திருப்பூர் அவர்களை இவ்வழக்கிலிருந்து விடுவித்து இவ்வாணையத்தால் ஆணையிடப்படுகிறது.***

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 769/A/2023</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**
பொதுத் தகவல் அலுவலர்/
தொழில்நுட்ப மேலாளர்,
மாவட்ட நில அளவை அலுவலகம்,
திருப்பூர்

பொதுத்தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் கூடுதல்
நேர்முக உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருப்பூர் - 641 604.

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பல்லடம் வட்டம்,
திருப்பூர் மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**
திரு. மோகன்குமார்
292/57, ஸ்ரீ லட்சுமி பொன்னுச்சாமி இல்லம்,
நால்ரோடு,
கருமத்தம்பட்டி,
சூலூர் வட்டம்,
கோயம்புத்தூர் - 641 659.

Copy to file

KRM/PA 07.07.2026